ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2135/65 - 2019 අගෝස්තු මස 09 වැනි සිකුරාදා - 2019.08.09

2135/65 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சிலாபம் நீர் வழங்கல் திட்டத்தின், நீர்க்குழாய்களைப் பொருத்துவதற்கும் மற்றும் வால்வு கட்டுப்பாட்டு அறையை நிர்மாணிப்பதற்கும் காணித்துண்டுகள் தேவைப்படுவதனால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளின் அசையாச் சொத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஓகத்து 02.
5/2/3/1464.

**அட்டவணை**

*வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில், சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 568, முன்னேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவில், முன்னேஸ்வரம் கிராமத்தில் அமைந்த, உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். ஸ்ரீதரன் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 3921 ஐக் கொண்ட நில அளவையாளர் வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் 1 இனால் குறிப்பிடப்படும் "முத்தன்குடி இருந்த செக்கு அடித்தோட்டம்" எனும் காணியில் கீழ்க்காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 14.50 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய காணித்துண்டு.*

*காணியின் இலக்கம் : காணித்துண்டு இலக்கம் 1*
*காணியின் பெயர் : முத்தன்குடி இருந்த செக்கு அடித்தோட்டம்*
*விஸ்தீரணம் : 14.50 பேர்ச்சஸ்*

**காணியின் எல்லைகள் :**

*வடக்கு : சிலாபத்தில் இருந்து குருநாகல் வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) ;*
*கிழக்கு : துவான் சரீப் உரிமை கோரும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். ஸ்ரீதரன் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 1370 ஐக் கொண்ட நில அளவையாளர் வரைபடத்தின் காணித் துண்டிலக்கம் 1 ;*
*தெற்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு உரிய வளாகம் ;*
*மேற்கு : சிலாபம் பிரதேச சபை உரிமை கோரும் காணி.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

*திருமதி ராஜபுத்ரகே திலினி தினேசிகா,*
*பழைய நீர்த்தாங்கிக்குப் பின்னால் (திம்பில்ல குளம் அருகில்),*
*தெதுரு ஓயா,*
*சிலாபம்.*

*8-905*

---

## *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொல்கஹவெல - பொத்துஹெர - அளவ்வை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின், பொத்துஹெர அலுவலகப் பொறுப்பதிகாரி அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குக் காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,*
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2019, ஓகத்து 02.*
*5/2/3/1479.*

**அட்டவணை**

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில், பொல்கஹவெல பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 884, அமுனுகம கிராம அலுவலர் பிரிவில், அமுனுகம கிராமத்தில் அமைந்த, நில வரைபட இலக்கம் 2405 இல் காணித்துண்டு இலக்கம் 01 இன் பகுதி (காணித்துண்டு எழுத்து "A") எனக் குறிப்பிடப்பட்டுள்ள முழு அளவில் சுமார் 85 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய "மெல்வத்த" எனும் பெயருடைய காணியில் கீழ்க்காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு.

காணியின் பெயர் : மெல்வத்த
விஸ்தீரணம் : 85 பேர்ச்சஸ்

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : நில வரைபட இலக்கம் 2405 இல் காணித்துண்டு இலக்கம் 221 1/2, 221 2/2, 222 ;
கிழக்கு : பிரதான பாதையிலிருந்து வீடுகளுக்குச் செல்லும் பாதை ;
தெற்கு : முதலாவது ஒழுங்கை மற்றும் வாய்க்காலுக்கு உரித்தான இட ஒதுக்கீடு ;
மேற்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி மற்றும் மெல்வத்த விளையாட்டு மைதானம் (காணித்துண்டு இலக்கம் 213 இன் எஞ்சிய பகுதி).

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :

தலைவர்,
காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு,
இலக்கம் 475, கடுவெல வீதி,
பத்தரமுல்லை.

8-906